# ஆதி மார்க்க னீதி மொழி

**July 2026**

***இதழ் 60 – ஜூலை மாதம் 2026 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்னளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்னல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்னாலங்னளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்னள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்னள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே !

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் அருமையான இவ் வீசுமதியாம் ஆடி மாதப் பொழுதினிலே நமது ஆதி மார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்சிகையானது ஐந்து வருடங்கள் பொதிந்த அறுபதாம் மாதத்தில், ஜூன் மாதத்தின் அறுபதாம் இதழாக இன்று மெய்ம்மணம் கமழ உங்கள் முன்பாக மலர்ந்து உள்ளது.

நவமணிப் பொக்கிஷமாக ஒன்பது அவை நிகழ்வும் அதன் மகுடம் போன்ற இரண்டு இசை வகுப்பு நிகழ்வும் பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய செயலுள்ள திருவசனங்களுடன் குறைவிலா நிறைவுடன் கோதிலா அமுதாக வழங்கப்பெற்றுள்ளது. மனிதனுக்கு அறுபது வயது பூர்த்தி என்பது ஓர் ஆசீர்பாதமாக விளங்குவது போல் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் இவ் ஆதி மார்க்க னீதி மொழியானது அறியாமையை அறுக்கும் அறுபதாம் இதழாக தொய்வின்றி சீருடனும் சிறப்புடனும் மலர்ந்துள்ளது.

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் தங்களின் அனுபவமாக அருளியுள்ள செயலுள்ள திருவசனங்களை செயலாக அனுபவிக்கும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் தாங்கள் பெற்ற அறிவுச் செல்வமுடனும் அரும்பெரும் திறமையுடனும் சீர் சிறப்புடனும் இந்த சஞ்சிகையைப் பிரதி மாதமும் மலரச் செய்கின்றனர். எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்தால் குருவருளும் திருவருளும் இணைந்து கலைக் களஞ்சியமாக மலர்ந்துள்ள இந்த சஞ்சிகையை என் மக்கள் எல்லோரும் பார்த்து படித்து பலன் பெற வேண்டும் என எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி வணங்கி இதனை உங்கள் முன்பாக சமர்ப்பிக்கிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*ஆதிமெய் உதய பூரண வேதாந்ந னூலுக்கு னூன் முகம் கேட்டபோது, ஆண்டவர்கள்: னீதியெனும் பொருளான என்ற செய்யுள்தான் முகப்பு. அதற்கு முகப்பு ஆதிமெய் உதயபூரண வேதாந்நம் என்ற தலைப்பு வாசகம். அதற்கு முகப்பு ஆதியே துணை. அதற்கும் முகப்பு ஜீவ மந்நிரத்தார் கண்டு கூறியுள்ள புள்ளியதே அவர் வைத்த கூர் ஆகும்.*

*மரணக் குளிரை னீக்கும் தீ - னீதி. இதயாசனத்தில் விளங்ஙும் தெய்வ மலரில் உன்னை ஏற்றிவைப்பதே படிப்பு. அதுதான் மலர்மிசை ஏகுதல்*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2026 ஜூன் மாதம் அவை நிகழ்வுகள் – 2026 ஜூலை மாதம் வெளியீடு

## 04-06-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **உரை கிளம்பவு முள்ளமும் தித்திக்க...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
சப்த சப்தாதிய சாயலே மனிதப் பிறப்பின் அடையாளம். யுக அவதார புருஷரின் வளப்பம் மிகுந்த வார்த்தைகளைக் கேட்டு வனப்புற்ற சிலரே மெய்ப்பலன் அடைகின்றனர். தன் நாமத்திற்குரிய பொருளை அறிவதே மெய்ஞ்ஞானம். குருபிரானின் திரு ஆலவாய்ச் சூலிலிருந்து கிளம்பும் உரையானது நம் அறியாமை இருட்திரையைக் கிழித்து அறிவை ஒளிரச் செய்கிறது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் : 15 (தொடர்ச்சி) :** ஏழாம் பிறப்புடலம் எடுத்து நித்தியத்தை அடைவதற்கே மனிதனுக்கு அறிவு மாணிக்கம் தரப்பெற்றுள்ளது. நம் ஜென்மப் பிணியின் பிறப்பறுக்கவே, பெரியோர்கள் அமலாம் பஞ்ஞாட்சர வாளாயுதம் கொண்டு மெய்ஞ்ஞான ராஜபாட்டையை நடத்துகிறார்கள். நிர்க்குண அலங்கிர்தரின் பேரிரக்கத்தால் சாவரும் முன் சாகப் பழகியே அறிவிருக்கும் தலத்தில் குடியேறி ஆன்மப் பொருளுடன் இரண்டறக் கலந்து வாழ முடியும்.

*ஜீவ சகோதரர் கௌதம் :*
யுகந்தோறும் வரும் பாரவான்கள் மூலமே சர்வ வேதங்களும் உயிர் பெறுகிறது. ஆலயம் மாற அரசு மாறும் எனும் தீர்க்கத் தரிசன வார்த்தை நிஜமாக்கப் பெற்ற எல்லையே ஆதி மார்க்க னீதி அவை. கிள்நாமக்காரர் எனும் திருநாமமானது புவி ஆள வரும் குரு பிரானுக்கே உரித்தானது. ஞானத் தலைவனாக வந்து மெய் ஆடலங்கள் புரிந்து அழியா வரம் அருளும் அன்னவரின் திருப்பாதம் பணிவோம்.

*ஜீவ சகோதரர் மணிமாறன் :*
உலகை உய்விக்கவே பல இடர்பாடுகளைத் தாண்டி, பெரியோர்கள் ஆலயங்களை ஸ்தாபித்து மெய்ஞ்ஞானம் அருள்கிறார்கள். ஒத்தையாய் எந்நாளும் உள்ளவராம் குரு பெருமானின் திருவடி நிழலில் தஞ்சம் புகுந்தவர்களின் மனமானது செம்மையாகி பிறவாமை அடைகிறது. இப்பெரும் பேற்றை அருளும் ஆசானின் உதவிக்கு நம் தலையை விலையாகக் கொடுப்பதே அதற்கு ஈடாகும். பெரியோர்கள் தாங்கி வரும் பெரும் மதிச் சுமையைத் தாங்குவதற்கு உரிய பாத்திரமாக நாம் என்றென்றும் இருக்க வேண்டும்.

*ஜீவ சகோதரர் சங்கர் :*
வினை தீரும் தருணமே ஞானவழி பிறக்கிறது. எவ்விதப் பாடும் படாமல், தேடாமல் கிடைக்கின்ற பொருளின் மகத்துவத்தை உணர்வது கடினம். ஆறாவது அறிவின் செயலை அறிந்து அதற்குரிய பலனை பெற்றவர்க்கே மெய் உணர்வு மேன்மை பெறும். சாகாமை எனும் அதி உன்னத நிலையை அருளும் ஆசானின் பரோபகாரச் செயலுக்கு, தம்மால் இயன்ற உதவி புரிந்து உறுதுணையாக வாழ்பவர்களே உயர் குடிப்பிறப்பிற்கு உரியவராவர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 06-06-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தன்னேழின் னபுசின்புற மேவுற வீர...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம் :**
பொய் மெய்யும் பிரித்துக் காட்டும் பொறுப்பிடமானது ஒவ்வொரு மனுத் தலைக்குள்ளும் வேதப்பதியாய் நின்றிலங்குகிறது. நம்மை கடுமையாகப் பற்றிக் கொண்டிருக்கும் வல் இருளை, பஞ்ஞாட்சர வாளாயுதம் கொண்டு வெட்டி வீழ்த்துபவரே வித்தகப் பெருமான். ஆசானின் திருவாக்கே நம் மரணக் குளிரை நீக்கி, நீதி வழியில் நடப்பதற்கான உபாயம் அருள்கிறது. அறிவு மாணிக்கத்தை நம் தலையில் பதித்து, கோடி சூர்யப் பிரகாசத்தில் குடியேற்றும் தெய்வீகச் செயலானது ஆதி மார்க்க னீதி அவையில் நித்தம் நிகழ்கிறது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் : 239 (தொடர்ச்சி) :** கண்ணுக்குத் தெரியாத எமனை வாயில் சொல்லவே பயந்தால், சந்திக்கும் போது அவன் வல்லபம் என்னவாக இருக்கும்? அழிவை நோக்கிப் பாயும் நம் மனதை மடைமாற்றி, அழியாமையில் ஆக்கவே சற்குருபிரான் அவதாரம் தாங்கி வருகிறார்கள். அனித்திய வாழ்வுக்காக நம் வயது வாழ்நாளை வீணாக்கினால் எமன் கையில் சிக்கித் தவிக்கும் அவல நிலை உண்டாகும். குருபிரான் கருணையால் மெய் வணக்கம் பழகி வருவதன் மூலம் நம் மனம் பிரம்மமாக மாறி சிவ பதத்தை அடையும்.

*ஜீவ சகோதரர் கோபிநாத் :*
கைபேசி குறுஞ்செய்திகளில் பல மோசடிகள் நடைபெறுகிறது. கடவுச்சொல் (OTP), வங்கிச் செய்தி, பயனரின் அனுமதியின்றி அனுப்பப்படும் செய்தி (Spam) என அனைத்தும் நம்மை அறியாமலே நம் தகவல்கள் அனைத்தையும் அபகரிப்பதற்கான வகை செய்கிறது. ஆதார் அட்டை, மின் கட்டணம், வங்கி பணப் பரிவர்த்தனை மற்றும் பரிசு இணைப்பு (Gift Link ) மூலம் தனிப்பட்ட தகவல்கள் திருடப்பட்டு பண மோசடிகள் செய்வதற்கு வாய்ப்புள்ளதால் கைபேசியை விழிப்புணர்வுடன் பயன்படுத்துவதே, இத்தகைய பாதிப்புகளில் சிக்காமல் நம்மைக் காக்கும். **எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு** எனும் திருக்கொரலின் படி அகம், புறம் சார்ந்த இரு வாழ்விலும் நாம் அறிவுத் தெளிவுடன் இருக்க வேண்டும்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :*
**பரிசுத்த வேதாகமம்: கொரிந்தியர் அதிகாரம் 1: திருவசனம் : 3, 8**
கர்த்தரின் தயவால் தேவ ஆவியில் பிறப்பதே மறுபிறப்பு. பிதா, சுதன், பரிசுத்த ஆவியானவர்கள் நினைவென்னும் ஆகாயத்தில் இருந்து சாட்சி சொல்கிறவர்கள். குருபிரானின் தயவால், நம் மனம் தளும்பி நிதம் அலையாமல் பாதுகாக்கும் அறச்செயலானது போதிக்கப் பெறுகிறது. மனிதனின் சுத்தத் துறை இருதயத்தில் வீற்றிருக்கும் இறைவனை தரிசிக்க வைப்பவரே தவசிரேஷ்டர். சமரசம், சமத்துவம், சமாதானம் என்பது உயிரொட்டிய இரகசியமாகும். தன் எனும் ஜீவக் குகைக்குள் நுழைந்து பத்து வயதான கன்னியை வணங்கும் செயலே பிரம்மவித்தை.

*ஜீவ சகோதரர் வடிவேலன் :*
மனிதனுக்கு தனிச் சீதனமாகத் தரப் பெற்றுள்ள புராதனச் சொத்தாகிய அமானிதத்தை அறிவிப்பவரே புராதன வேதியர். புலன் வழி பற்றி ஓடாமல் நம் மனதை காத்து ரட்சிக்கும் குருபிரானின் மீது ஆவல் ஓங்க வேண்டும். அவர்களின் நாதத் தொனியின் வல்லபமானது, நம்



Copyright © AMNA Trust, Chennai July 2026

அழி அவாவை அடியோடு அகற்றி, அறிவை பளிங்கு போல் ஒளி வீசச் செய்கிறது. தன்னறிவில் சாயாமல் நம் மனதின் கடிவாளத்தை பரமாத்ம சொரூபராக வரும் பெரியோர்களின் கைவசம் ஒப்படைத்து வாழ்வதே அசலான மெய் வாழ்வாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.

## 07-06-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய, **பள்ளியையு மெய்ப்பால் தந்த வள்ளலை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் ராஜேஷ் :*
பஞ்சபூதங்களில் ஒன்றான காற்று மனித உடலில் உயிர் சக்தியாக செயல்படுகிறது. குருபிரான் பெருங் கருணையால் காற்றைப் பிடிக்கும் கணக்கறிந்து, மூச்சு லயமாகிய மனோலயத்தில் பழகுவதே பிரம்ம வித்தை. காலச் சக்கரத்தின் மெய்ம்மை அறியாது காலன் வசத்தில் சிக்கித் தவித்த நம்மைக் காலனணுகா எல்லையாகிய கங்குல் பகலற்ற இடத்தில் குடியேற்றி வைப்பவரே குலகுரு.

*ஜீவ சகோதரர் பிரபு :*
நிஜ தேவத் தெய்வத் திருவடி நிழலில் தஞ்சம் புகுவது ஒன்றே பிறவாமைக்கான வழி. ஐயறிவு நுகர்ச்சியில் உழலும் நரனிடம் உள்ள ஆறாம் அறிவு ஆசான் நாதத்தின் மூலமே துலங்குகிறது. மனுத் தலையுள் சூட்சாதி சூட்சமமாகப் பொதிந்துள்ள வல்லப வஸ்த்துவை மெய் உணர்வின் மூலமே அறிந்து அடைய முடியும்.

*ஜீவ சகோதரி அபிராமி :*
இரு வினைக்கும் காரணமான வினைத் தலைவனாம் மனதைச் செலுத்துவதில் மிகுந்த ஜாக்கிரதை வேண்டும். புற வழியில் செல்லும் நம் மனதை, ஓர் எதார்த்த தேவகுருவின் வாய்மை மூலம் அகத்தில் திருப்புவதே அறிவின் செயல். குருவின் அருளால் ஏழாம் பிறப்புடலம் பெற்று பேரின்பப் பெருவாழ்வு பெறுவதே இம்மானிடப் பிறப்பின் நோக்கமாகும்.

*ஜீவ சகோதரி புன்னகை :*
ஆசானின் ஒலி வா மலையிலிருந்து பிறங்கும் நாதமே அருட்பெரும் ஜோதி. மாயக்கூத்தில் சிக்கி அறியாமை எனும் இருளில் மூழ்கிக் கிடந்த நம் அகத்தில் தூய ஞானச் சுடர் விளக்கு ஏற்றி வைப்பவரே அருட்குரு. சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தை தரிசிக்க வைக்கும் செயலே சாகாக்கல்வி. அதன் மூலம் சாகாக்கலை பழகித் தேர்ந்து ஃஎனும் பிரம்மத்தின் அருளொளியில் இரண்டறக் கலந்து இன்புற்று வாழ்வதே வாழ்வு.

*ஜீவ சகோதரி விமலா ராஜேந்திரன் :*
ஆவிடை எனும் தேவ யோனியில் மறுபிறப்புப் பெற்றவனே மனிதன். இறைவனின் ரகசியப் பெட்டகமாகிய மனிதன் ஒருவனுக்கே ஆறறிவு மாணிக்கம் தரப் பெற்றுள்ளது. தூல வாழ்வைப் பெரிதென எண்ணி வீணாகும் நம் வயது வாழ்நாளைக் கடவுள் நாளாக மாற்றித் தரும் குருவின் செயலே பிரம்ம வித்தை.

*ஜீவ சகோதரர் ராஜமகேஷ் :*
மனிதனின் உள்ளத்தில் தோன்றும் பயம் பேடித்தனம் இதன் காரணம் எமனுடைய வாடை அடிப்பதுதான் என்பது சாலை ஆண்டவர்கள் திருவாக்கு. ஆறறிவு பெற்ற மனிதன் மட்டுமே இருளுக்கு பயந்து, பரிணாம வளர்ச்சியால் பல சாதனப் பொருட்களைக் கண்டுபிடித்து



Copyright © AMNA Trust, Chennai 


செயற்கை வெளிச்சத்தை உண்டாக்கி புற இருளைப் போக்கிக் கொள்கிறான். அருட்ஜோதி தெய்வமாக வரும் ஆசான் அருளே, நம் அக இருளை நீக்கி நூறொளியை தரிசிக்கச் செய்யும். பவக்கடலில் தவிக்கும் மாந்தரைக் கரை சேர்க்கப் பருமரக் கலனாக வரும் சிவகுரு வரதரின் திருப்பாதம் பணிந்து நித்திய சொர்க்கபதி வாழ்வில் குடியேறி வாழலாம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 11-06-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. முத்துலட்சுமி சீனிவாசன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **பூமியின் பாரம் தீர்க்க புதுப்புது னாமம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
மனுத் தலைக்குள் பிறப்பும் இறப்பும் நிகழும் இடத்தை நிஜ ரூப தரிசனையாக்க வல்லவரே குருபிரான். உலகை உய்விக்கவே கால காலங்களாக காமீல்கள் கைம்முறையாக மெய்ஞ்ஞானப் பயிரானது விதைக்கப் பெறுகிறது. ஆதிசங்கரரும் தம் குரு பிரானிடத்தில் பெற்ற பிரம்ம வித்தையைத் திட வைராக்கியமாகப் பழகித் தேர்ந்தே அறுவகை சமயத்தை நிலை நாட்டினார். மெய் ஆசானிடம் சரணடைந்து ஜீவ ரட்சிப்புடன் வாழும் மக்கள் யாவரும் தீர்க்க தரிசனத்தின் மெய்ம்மையை உணர்ந்து உயர்குடியில் வாழ்வது சத்தியமே.




**திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் : 15 (தொடர்ச்சி)** ஏழாம் பிறப்பாகிய மறுபிறப்பு பெற்ற பிறகும் தேவ சட்டப்படி நடக்காவிட்டால் நினைவில் தீமை ஏறி, ஜீவவித்து சிதறி மீளா நஷ்டத்தை ஏற்படுத்தும். மனுத் தலையின் உன்னத சிறப்பையும், வர நிற்கும் நீங்காத ஆபத்து பற்றியும் பேசப்பெறும் சிறப்பு எல்லையாகிய குருஷேத்திரத்தை மிகவும் பிரதானமாக நினைக்க வேண்டும்.

**குருபிரான் அருளமுதம் :**
மனம் அலையாமல் பாதுகாக்கும் செயலே அறமாக, பிரளய நீதியாக உள்ளது. எம பயத்தை தாண்டி வாழ்வதற்கான ஆறாவது அறிவைப் பெற்றவனே மாண்புள்ள மனு. எண்ணாயிரம் கற்ப காலம் யோகம் இருந்தாலும், சலிக்காத இன்ப நாட்டில் குடியேறி வாழ்வதே அசலான மெய் வாழ்வாகும்.

**குரு ஸ்தோத்திரம்:** காவலான புராதன வேதியரே நிழல் போலும் பிரியாது நம்மை ஆளும் ஆண்டவராக இருக்கிறார். ஜீவனை அறிந்தவர்க்குத் தமிழ் அறிவு வடிவாகவும், ஏனையோருக்கு



Copyright © AMNA Trust, Chennai

ஏட்டிலுள்ள எழுத்தாகவும் உள்ளது. மக்களின் அறியாமை எனும் இருளைப் பிடுங்கி எறியவல்ல கூரோங்கிய மந்திர வாளாகத் திகழ்வதே சாலைத் தமிழ்.

**குருமணி மாலை:** கூர்ந்த ஒரு பொருளாம் ஆதிப் புள்ளியிலிருந்தே சர்வமும் படைக்கப் பெறுகிறது. நினைவென்னும் ஆகாயத்தில் தீமையை ஏற்றாமல், மகா பரிசுத்தமாக ஒழுக்கமாக வைப்பதே சொர்க்கம். பெரியோர்கள் நாவாஸ்திரம் கொண்டு நரனாக இருந்த நம்மை முறைசங்கார அனுக்கிரகத்தால் மனுவாக மாற்றுகிறார்கள். குரு வள்ளலின் மதி பூத்து ஒளிர் நாவாகிய வாளாயுதத்தின் மூலமே துப்புரவாகத் துலக்கும் ஆசானை நம் அகமியத்தில் அறிந்து அடைய முடியும். நாவுக்குப் பெரிதாக உலகமில்லை என்ற தேவ ரகசியச் செயலை, ஆகாய கங்கையில் ஸ்நானம் செய்யும் ஆதி மார்க்க னீதி அவையின் மக்களே அறிவர்.

*ஜீவ சகோதரர் வடிவேலன் :* பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய ஆதி மெய் உதய பூரண வேதாந்தத்தின் குருமணி மாலை பாடலில், பத்து வகை முகத்தை பதினெட்டு நிலைகளாகப் பிரித்து அருளியுள்ளார்கள். ஜலால், ஜமால் எனும் சிவ சக்தி நிலையை ஞானக் கடலுக்கு ஒப்பாக குறிப்பிடப் பெற்றிருப்பதன் மெய்ச் செயலானது ஆசான் அருளால் ஆதி மார்க்க நீதி அவையில் மெய்யாக்கப் பெறுகிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 13-06-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **இணங்கிய சுபாவம் பார்த்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவ சகோதரர் கௌதம் :* ஆதியில் இறைவனின் சமூகத்தில் விருப்பு வெறுப்பற்ற ஜட அணுவாக இருந்த ஆன்மப் பொருளானது அறிவு விளக்கம் பெற்று தன்னையறியவே உயிரணுவாக பிறப்பெய்துகிறது. அதுவே குருபிரானின் நாத உபதேசத்தின் மூலம் சிவானுபவம் பெற்று, பரம அணுவாக மாறி மீண்டும் ஆதிப் புள்ளியில் சென்று அடங்குவதே அழியாப்பதி வாழ்வாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 239 (தொடர்ச்சி)**
எமன் பிடியிலிருந்து மீண்டு நித்திய தேகத்தை நீ கைபோடும் வரை உபதேசம் நடக்கிறது. திருச்சிற்றம்பலப் பொருளாகிய ஜீவன் இருக்கும் ஸ்தானமே மூல மந்திரம். குருபெருமான் தயவால் எமனை வென்று இதயாசனத்துள் வீற்றிருக்கும் இறை பொருளைத் தரிசித்து முக்தி பெறுவதே மனிதப் பிறப்பின் நோக்கமாகும்.

*ஜீவசகோதரர் கோபிநாத் :* கைபேசி மூலம் மனிதனை அடிமைப் படுத்தும் பொழுதுபோக்கு அம்சங்கள் உடல் வலிமையைத் தராமல் சோர்வைத் தந்து நேரத்தை வீணாக்கி கவனத் திறனைக் குறைத்து மனதைப் பாதிக்கிறது. நம்பகமற்ற செயலிகளை நிறுவுதலால் பொருளாதார மோசடிக்கு வழி வகுக்கும். எனவே விவேகமுடன் செயலிகளைத் தேர்ந்தெடுத்து, பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளைக் கண்காணித்து, தொழில் நுட்பத்திற்கு அடிமையாகாமல் பயனுள்ள கருவியாகக் கையாளும் வழியைக் கற்பிக்க வேண்டும்.

**பரிசுத்த வேதாகமம் - கொரிந்தியர் அதிகாரம் : 1 திருவசனம் - 9,10,11,21 -**
*ஜீவசகோதரர் விஜயகுமார் :* மனிதனை அழிவற்ற னித்திய வாழ்விற்கு அழைப்பதே தேவனின் அழைப்பாகும். அத் தெய்வீக அழைப்பை ஏற்றுக்கொண்ட பெரியோர்களே உலகின் வெளிச்சப் பொருளாகத் திகழ்கிறார்கள். **தட்டுங்கள், தேடுங்கள், கேளுங்கள்** என்ற மகா வாக்கியத்தின் படி, வழியும் சத்தியமும் ஜீவனுமான இறை உண்மையை நோக்கி மனிதனை மெய்ப்



Copyright © AMNA Trust, Chennai 

பாதையில் நடத்துகின்றனர். அக உணர்வில் பரிசுத்த ஆவியில் நிலைத்து இறைவனுடன் ஒன்றாகி வாழ்வதே தேவனுடைய அழைப்பின் நிறைவும் னித்திய வாழ்வின் மகிமையும் ஆகும்.

*ஜீவசகோதரர் வடிவேலன் :* ஜலால் ஜமால் எனும் சிவசக்தி சங்கமமே மனிதனுக்குள் தெய்வீக பந்தத்தை ஏற்படுத்தும் பரம இரகசியமாகும். ஞானக் கடலாக வரும் குருபிரான் அருளால் நம் இருதயத்தில் மெய்யறிவு உதிக்கும் செயலே உயர் ஞானம். மூச்சு லயமாகிய மனோ லயத்தின் மூலமே நம் மும்மலம் கருகி முச்சுடர் தோன்றும். ஆசான் தன் நாத வல்லபத்தால் மக்களின் அஞ்ஞானக் கிழங்கை வேரறுத்து அறிவுப் பிரகாசம் அளிக்கும் அரும்பெரும் செயலே ஆதி மார்க்க னீதி அவையின் அடிநாதமாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 14-06-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வேதகலைக் கதிபதி மாதுல ராகிய மன்னா மன்னோ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவ சகோதரர் A.T செல்வகுமார் :* ஒரு மெய்க் குருபிரான் தயவால்தான் ஆன்மீக நூல்கள் பற்றிய அறிவும், கோயில் வழிபாட்டின் உண்மைப் பொருளை அறியும் அறிவும் உண்டாகிறது. இறைவனின் இருப்பிடம் நம் இருதயம் என்ற பேருண்மையை உணர்த்தி அறியாமை விலக்கி அறிவை நோக்கி பயணிக்க வைக்கும் பரம குருவின் திருப்பாதம் பணிவதே நம் வாழ்வின் மிகப்பெரிய பாக்கியம்.

*ஜீவ சகோதரர் செல்வகுமார்:* ஆறறிவு பெற்ற மனுவும் அனைத்து ஜீவ பேதங்களும் மரணம் என்ற நியதிக்கு உட்பட்டவைகளே. மெய்க்குரு பிரானின் திருநாத ஒலி வீட்டிலிருந்து பிறங்கும் சொல்வாக்கே தேவ அமுது. நாம் செவி வாயிலாக அதனை உண்டு ஆன்ம ஞானத்தை அடைய வேண்டும் என்பதே பெரியோர்களின் நோக்கமாகும். யாத்திரை, பூஜை, ஆச்சார அனுஷ்டானங்கள் புற வழிபாடுகள் இவற்றை விட்டு மெய்க்குருவின் அருளால் மூச்சு ஓடாத் தவமாகிய சிவ நிலையை அடைவதன் மூலமே மெய்யறிவு பெற முடியும்.

*ஜீவ சகோதரர் நேதாஜி :* மனுவுக்குள் பிராணனின் சூட்சுமமாக இயங்குவதே காலச்சக்கரம். அதுவே வினாடி முதல் யுகம் வரை விரிந்து ஒன்பது கிரகங்களின் அதிகாரத்துடன் ஒரு நாளில் 21,600 சுவாச இயக்கமுடன் நம்மை ஆள்கிறது. மெய்ப்பால் அறிவதற்காக தரப்பெற்றதே மனிதனின் வயது வாழ்நாள். குருபிரான் தயவால் காலம் கடந்த பொருளைக் கைக் கொண்டு முக்தி நிலை அடைவதே மனிதப் பிறவியின் இலக்காகும்.

*ஜீவ சகோதரர் பாலசுப்ரமணி :* வடலூர் வள்ளல் பிரான், மரணமிலாப் பெருவாழ்வே சன்மார்க்கம், சாகாதவனே சன்மார்க்கி, சாகாத கல்வியே சன்மார்க்கத்தின் முடிவு என்கிறார். குருபிரான் உபதேசத்தால் ஜீவாத்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலக்கும் செயலே சாயுச்யம். குருவினிடம் பிரம்ம வித்தை பழகித் தேரும் ஞானக் கல்வியே மெய்க் கல்வி. ஆசானின் அருள் வழி பற்றி நடப்பவரே பிறவிச் சுழல் கடந்து பிறவாமை அடைகின்றனர்.

*ஜீவ சகோதரி வாசுகி பிரகாஷ்:* பிரம்மம் அழிவற்றது, அதன் இயல்பு சத்தியம், ஞானம், ஆனந்தம் என்கிறது பகவத்கீதை. உலகத் தோற்றம் யாவும் இறைவனின் வெளிப்பாடே என உணர்ந்தால் அகங்காரம் விலகும். சர்வத்திலும் நிறைந்த இறைவனை அகத்தில் உணர்வதே



Copyright © AMNA Trust, Chennai 

விஸ்வரூப தரிசனம். இறை இல்லமே க்ஷேத்திரம், இறையை வழிபடும் ஆன்மாவே ஷேத்ரக்ஞன் என்ற அகமிய நிலைகளை குருவின் அருளால் தன்னுள் அறிவதே அறிவு.

*ஜீவ சகோதரர் பொன்செல்வம் :* குருபெருமானின் நாத உபதேசமே நம் அறியாமை அகல்வதற்கான ஆதாரமாகும். மெய்யெனும் பொருப்பு இன்னதென அறிந்து மனம் தெளிந்தவர்க்கே முத்தி வாய்க்கும். நித்திய வாழ்வுக்கென வந்தோரே நாம் என உணர்ந்து வாழ்வதே உயர் ஞானம். பிறவிச் சுழலில் இருந்து விடுவித்து பிறவாமை எனும் பெரும் பேறு அளிக்கும் வல்லமை உடைய அருட்குருவின் திருவடியில் சரணடைவதே அழியா சாம்ராஜ்யத்தில் குடியேற ஏதுவான வழியாகும்.

*ஜீவ சகோதரர் வடிவேலன்:* சர்வ வேத வேதாந்தங்களில் அருளப் பெற்றிருக்கும் இறை உண்மையை நம் அகத்தில் அறிந்து அடைய வேண்டும். கால வட்டத்தில் சுழன்று நவக்கிரகங்களின் ஆட்சியில் அகப்படாமல், மையத்தில் நிலைத்து நின்றால் மதி அமுதத்தைப் பருகி காலாதீத எல்லையை அடையலாம். குருபிரானின் அருளமுத வர்ஷிப்பானது நம் செவியில் புகுந்து எண்ணம், சொல், செயலாகி சிவானுபவமான பிறகே முழுமை பெறும்.

*ஜீவ சகோதரர் சங்கர் :* ஆதி மார்க்க னீதி அவையானது, அது என்ற நாமமும் ஆதி என்ற நாமமும் பிரகாசித்துக் கொண்டெழுந்து நிற்கும் திருக்குழாம் ஆகும். இம் மாபெரும் அவையில் நாம் கூடுவது அறிவுத் தெளிவு பெற்று வினை கடந்து வீடுபேறு அடைவதற்கே. குரு அருளால் கிடைத்த வரம்பற்ற மெய்ஞ்ஞானம் அரிதிலும் அரிதான ஒன்று என உணர்வதே மெய் உணர்வு.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 18-06-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அருளிய **துறந்தமனத் தனியோகர் உளத்திற் பூக்கும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:*
மெய்க்குருவின் தூய்மதியான னாதம் தேனமுதாக சீடனின் செவியில் பாய்ந்து அவரவர் சிரசில் உள்ள இருதயத்தைப் பிரகாசிக்கச் செய்கிறது. பழமை ஞானத்தை முதுமொழியாக அருளும் பழம் புராதனரின் அருண்மணித் திறவுகோல் நம் மனப்பூட்டைத் திறக்கச் செய்கிறது. எமன் வசம் சேர்க்கும் வஞ்சப் புலன்களின் தலைவனான மனதைத் துறந்தவனே துறவி. அமானிதத்தின் சிறப்பறிந்த மக்களே ஐவழி விளைவின் அப்பாலாகிய அசலான மெய்வழியை அறிவர்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: திருவாக்கியம் எண் : 15 (தொடர்ச்சி)**
**குருபிரான் அருளமுதம் :**
கடத்தின் உள் இருந்து இயக்கும் அவரவர் னாமத்துக்குரிய இறைபொருளே கடவுள். மிடிமை இடராகிய சோம்பேறித்தனம் நீங்கவே ஆச்சார அனுஷ்டானங்கள் பெரியோர்களால் எடுத்து வைக்கப் பெற்றது. தன்னையறியும் செயலுக்காகவே அறிவெனும் மாணிக்கத்தை கடனாகப் பெற்று வந்தவன் மனு. அமானிதக் கடனை அடைப்பதற்கான வழியே அஷ்டாங்க யோகமாகும். குருபிரான் திரு நோக்கிற்கு இணங்கி, இட்ட கட்டளைகளை சிரமேற் தாங்கி மெய்ஞ்ஞானத்திற்காக பாடுபட்டவரே மெய்ப்பலன் பெறுவர்.


Copyright © AMNA Trust, Chennai

**குருமணி மாலை :**

ஜலால் ஜமால் எனும் இருகடல் மோதுதலால் உண்டாகும் தெய்வீக உதயமே மறுபிறப்பின் ரகசியமாகும். வேத சாட்சியே நாம் பெற்ற ஞானத்தை உணர்வதற்கான ஒரே வழி. **சத்தம் பிறக்கும் இடம் அத்தன் இருப்பிடம்** எனும் மெய் நிலையை உணர்ந்தவர்களே செத்திடம், பிறந்திடம், இனிச் சாகாதிருக்குமிடம் அறிந்து மரணமிலாப் பெருவாழ்வை அடைவர். இம் மெய்ச் செயலை அனுபவத்தால் அறிவதே மெய்யறிவாகும்.

**மஅரிபத்து மாலை - குருபிரான் அருளமுதம் :**

தற்கலை பீர்முகம்மது ஒலியுல்லா அவர்கள் பொருட்பால், அருட்பால், காமப்பால் என முப்பாலை வைத்து மஅரிபத்து மாலை எனும் நூலில் கலிமாவின் ரகசியத்தை 12 அறிவுகளாகவும், அதன் மேல்நிலை வைப்புகளை அஷ்டாங்க யோக செயல் பழக்கமாகவும் அருளியுள்ளார்கள். எட்டு வகை மக்காமில் அடங்கும் அடக்கம் பற்றிய தவனிலை ரகசியங்களும், இன்பத்துப் பாலில் சிவகாமத்துப் பால் அருந்துவதற்கான செயலும் அருளப்பெற்றுள்ளது. இஸ்லாத்தில் சரியை ஒழுக்கமாக ஐந்து கடமைகள் கட்டாயமாக வைக்கப் பெற்றுள்ளது. ஒழுக்கத்தில் தேர்ந்து மெய்ம்மையில் சார்ந்து வாழப் பழகும் போதே வினைக்குத் தலைவனான மனம் யௌவனமாக மாறும். நம் மனம் செம்மையாவதே மெய்ஞ்ஞானம் பெற்றதன் அடையாளம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது .

## 20-06-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓதுமறை வேதநெறி உண்மையாய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவ சகோதரர் கௌதம் :* எழுதாத எழுத்தாகிய சிவமயப் பொருளை ஓதாமல் ஓதும் இரகசியமே வேதநெறி. உயிருக்கும் மேலாக ஓம்பப்படும் ஒழுக்கத்தில் நம்மை வாழ வைப்பவரே குரு பெருமான். மாதவத்தை கைக் கொண்டு வரும் வேதநாயகரின் திருக்கரத்தில்தான் மரணவறுமை தீர்க்கும் மாமருந்து உள்ளது. ஆசான் திருவடியில் சற்பாத்திரனாக வாழும் சீடர்களே ஏதுமிலாத பரவெளியில் ஒடுங்கி வேதமுடியை அறிந்த மகான்களாக மாற்றப் பெறுகிறார்கள். அனித்திய உடலெடுத்து அழி உலகில் உலவும் மக்களை மீட்டெடுக்கும் தெய்வீக எல்லையே ஆதி மார்க்க நீதி அவை.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 239 (தொடர்ச்சி)**

மனிதனின் இறுதித் தருவாயில் எமனுடைய கையைத் தட்டி விட்டு எக்கோடி காலத்திற்கும் மாறாத நித்திய தேகத்தைக் கைபோடும் வரை உபதேசம் நடந்து கொண்டே இருக்கும். குருபிரானின் விருப்பு சொர்க்கம், வெறுப்பு நரகம் என்பதை மெய்யறிந்த மக்களே உணர்வர். எமன் எனும் கொடூரனிடம் சிக்காமல் நம்மை பாதுகாக்கும் பரம தயாளரின் பேருதவிக்கு கைம்மாறாக வையகமும் வானகமும் ஈடாகாது.

**பரிசுத்த வேதாகமம் : கொரிந்தியர் அதிகாரம் : 1 திருவசனம் : 1 முதல் 5 வரை**

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* அழிவற்ற பரம் பொருளாகிய ஆத்மனைத் தன் முயற்சி கொண்டு அறிய முடியாது. இறைவனிடத்தில் சீதனமாகப் பெற்று வந்த அமானிதத்தை மெய் மகத்துகளின் கருணையால் அறிந்து அடைவதே மெய்ஞ்ஞானம். பிரம்ம வித்தை எனும் செயலை நித்தம் பழகித் தேர்வதன் மூலம் கர்த்தரைக் காண முடியும். பெரியோர்களால் அருளப் பெற்ற பல கோடி மா மறைகளும் நம் ஜீவனைக் குறித்தே பேசுகிறது. குருபிரான் தயவால், ஜீவன் வேறு சிவன் வேறு அல்ல என்ற அகமிய இரகசியத்தைத் தன்னுள் சிவ அனுபவமாகப் பெற்ற மக்களே அன்னாட்டிற்குரிய வித்தாக விதைக்கப் பெறுகிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**குரு மணி மாலை -** *ஜீவ சகோதரர் வடிவேலன் :*

நம் மனம் என்னும் மலரை, நூலாகிய பிராணனுடன் சேர்த்து மாலையாக்கி இறை குருவிற்கு சூட்டும் இரகசியமே குருமணி மாலை. மதி வள்ளலாக வந்து ஒளிர் நாவின் மூலம் தீன் மணியைத் தொட்டுக் காட்டி, தௌஹீது மக்காம் எனும் இறை இல்லத்தில் நம்மைக் குடியேற்றி வைக்கிறார்கள். ஞானக்கடலாக வரும் குரு பெருமான் நம்மை அறியாமை எனும் இருளில் இருந்து மீட்டு தன் நன்நாதத்தின் மூலம் ஜலால் ஜமால் எனும் சிவசக்தியின் சங்கமத்தை அறியச் செய்கிறார்கள். மேலும் இலாஹி இலாஹூ எனும் மெய்ச்செயலை பழகச் செய்து, காருண்யப் பேரொளிக்குள் தெய்வீக உதயத்தை கண்டு தரிசிக்கச் செய்கிறார்கள். இம் மெய்ச்செயலில் ஏற வொட்டாது நம்மைத் தடுக்கும் மாயத் திரைகளை நாவாஸ்திரத்தால் வெட்டி வீழ்த்தி, நம்மைக் கதி திரு வீட்டில் குடியேற்றி வைக்கும் தெய்வ ஆசானின் திருப்பாத மலரில் சரணாகதி அடைவதே பேரின்பப் பெருவாழ்வாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 25-06-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தரைதனில் னரராய்த் தோன்றித் தாம்கெதி…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**

சற்குரு நாதரின் தயவால் தன்னுலகம் விடிந்து அறிவுத் துலக்கம் உண்டானவர்களே அசலான சாலை வாசியாய் வாழ்வர். இறை சன்னதங்கள் பெற்று இவ்வுலகை இரட்சிக்க வரும் பெரியோர்களின் சிவாஅனுபவமே வேத வேதாந்தங்களாக அருளப்பெறுகிறது. தோற்றமில்லாமை எனும் அரூப வடிவத்துள் ஆவிப் பொருளாய் நின்றிலங்கும் இறைவனை தரிசிக்க வைப்பவரே மெய்க்குரு. ஆறறிவு உடலெடுத்தும் ஐயறிவு நுகர்ச்சியிலே உழன்று கிடந்த நம்மை மீட்டெடுத்து, ஜீவேசத்தகை வாழ்வளிக்கும் வித்தகப் பெருமானின் விரைகழலே சரணம்.

*ஜீவ சகோதரர் கௌதம் :* பிரம்ம சொரூபத்திலிருந்தே சர்வ படைப்புகளும் வெளியானது. கால் வழியில் பிறந்தவனை நரன் என வேதம் கூறுகிறது. நரப்பிறப்பில் பிறந்து நற்திசை அறியாது விழிக் குருடாயிருந்த நம்மை ஆட்கொண்டு அறிவு வெளிச்சத்தில் வாழ வைப்பவரே பிரம்ம நிஷ்டர். நரனை மக்களாக்கி, மக்களை தேவர்களாக்கும் தடையற்ற முழு தீரத்தை உடைய மெய்க்கல்வி போதிக்கப் பெறும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் : 16**

மனுவின் வயது வாழ்நாளாகிய பொக்கிஷத்தை சுவாசத்திலும், அந்த சுவாசத்திற்கு வேண்டிய ஜீவ உணவை பூவிலும் வைத்து இறைவன் படைத்தான். அப் பெருங்கருணை பேரறிவு முன்பு பலன் தராத ஒன்றே மனிதனின் சிற்றறிவு. பூவின் நறுமணத்தைத் தேடி வரும் தேனீ போல், பெரியோரின் நாதத் தொனி எதார்த்த உள்ளம் கொண்டோரை ஈர்க்கிறது. தேவ யோனியாகிய செவியின் மூலமே நாதத் தொனியை நாம் புசித்து, அதன் மூலம் மனம் தளும்பி நிதம் அலையாமல் பாதுகாக்கும் செயலே அறம். ஆசானின் நிறை மொழியே அழி தேகத்தின் மீதுள்ள நம் பற்றகற்றி, அழியா தேகத்தைப் பற்றச் செய்கிறது.

*ஜீவ சகோதரர் சங்கர் :* கயிலாயப் பரம்பரையாய் அவதரித்து வரும் மெய்க்குரு பிரானின் அன்பே நம்மை சிவமாக்கும். இச்செயலை உணர்த்தவே சைவ சித்தாந்தத்தில் **அன்பே சிவம்** என முளை அடித்தாற் போல் கூறப் பெற்றுள்ளது. தோற்றமும் முடிவும் அற்ற ஆன்மப் பொருளை அறிவதற்கே மனிதனுக்கு ஆறாவது அறிவு தரப் பெற்றுள்ளது. **தொட்டுக் காட்டாத**



Copyright © AMNA Trust, Chennai 

**வித்தை சுட்டுப் போட்டாலும் வராது** என்ற பழமொழிக்கு ஏற்ப, குருவின் தயவு ஒன்றே அழியாப் பொருள் இன்னதென தொட்டுக் காட்டி, பிரம்ம வித்தையின் மூலம் ஆன்மப் பொருளை தரிசிக்க செய்யும். உயிருக்கு மேலான ஒழுக்கத்துடன் வாழ்ந்து, சிரம் பெருந் துறையில் வீற்றிருக்கும் ஜீவனைக் கண்டு தரிசிப்பதே ஜென்ம சாபல்யம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## இசை வகுப்பு
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 07-06-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அளவிலா வெகு காலமிப் பூமியிற்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் அருளிய படி, **குரு ஸ்தோத்திரம்** திருப்பாடல்கள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 14-06-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அண்டராலு மறிய வொண்ணாத் திரு...** எனும் குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் அருளிய படி **குருஸ்தோத்திரம்** திருப்பாடல்கள் பதம் பிரித்துப் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!



Copyright © AMNA Trust, Chennai 

## 2026 – ஜூன் மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

**27-06-2026 ~ சனிக்கிழமை**

சற்குருபிரான் திருமுன்பாக திண்டிவனம் சரவண நந்தவன வளாகத்தில் அமைந்துள்ள பரிசுத்த மெய் ஆலயத்தில் இரவு சிறப்பு அவை நடைபெற்றது.



**28-06-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

சற்குருபிரான் திருமுன்பாக திண்டிவனம் சரவண நந்தவன வளாகத்தில் அமைந்துள்ள பரிசுத்த மெய் ஆலயத்தில் பௌர்ணமி கொடியேற்றும் விழா சிறப்பாக நடைபெற்றது.

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **14-08-2026 / திண்டிவனம் வெள்ளிக்கிழமை** | குருபிரான் திருமுன்பாக 14.08.2026 வெள்ளிக்கிழமை மாலை சரவண நந்தவன வளாகத்தில் அமைந்துள்ள பரிசுத்த மெய் ஆலயத்தில் மங்கையர் பொங்கலிடும் மாலை பானைப் பலி திருவிழா நடைபெற இருக்கிறது. |
| **15-08-2026 / திண்டிவனம் சனிக்கிழமை** | குருபிரான் திருமுன்பாக 15.08.2026 சனிக்கிழமை காலை சரவண நந்தவன வளாகத்தில் அமைந்துள்ள பரிசுத்த மெய் ஆலயத்தில் கொடியேற்றும் வைபவமும் தொடர்ந்து கூழ் வார்க்கும் திருவிழாவும் நடைபெற இருக்கிறது. |



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2026 ஜூன் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 66**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 60 – Month: July 2026*



Copyright © AMNA Trust, Chennai